## Rates

*Subscriptions* :

Inland Rs. 15-00 per year

Foreign Rs. 20-00 " "

Single copy 40 cts. (including postage)

*Advertisement* :

On application

*In Memoriam* :

Rs. 12-50 per insertion (within 4 inches)

*Order Nisi* :

Rs. 15-00 for two insertions (within 6 inches)

# The MORNING STAR
உதய தாரகை

Registered as a Newspaper

(Established 1841)

Published Every Friday

Vol. 128. JAFFNA, FRIDAY, JANUARY 26TH, 1968. No 4

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

## Notice

*Please Address* :

(1) All Editorial matter (excluding news) for the English pages) to: The Editor. The *Morning Star*, Vaddukoddai.

(2) All news to the News Editor Vaddukoddai.

(3) All Editorial matter for the Tamil pages to: The Tamil Editor, The *Morning Star*, Parsonage, Alaveddy.

(4) All Business correspondence re Advertisements and Subscriptions and all remittances to:

The Manager, The *Morning Star* — A. Kadirgamar, Esq. College Lane, Vaddukoddai.


## FROM THE MANAGER'S DESK

Our advertisement rates have been revised as follows, and will take effect from January 1st, 1968. All advertisements within 2 ins. Rs. 10-00. In Memoriam Rs. 12-50.

Other rates on application.

## Calendar of Events

**January 29:**
Sacerdotal Jubilee of the Rev. A. E. K. Lewis at St. Mary's Church, Kopay, at 7.45 a. m.

**February 6:**
Ceylon - America Society Meeting at Trimmer Hall at 4-30 p. m.

**February 7 — 10:**
'Camp Farthest Out' by Roland Brown and Marcia Brown at the Christa Seva Ashram.

O

## G. C. E. (O. L.) CHRISTIANITY NON R. C.

Subsequent to the cancellation of the August Examination of the General Certificate of Education (Ordinary Level) the Commissioner of Examinations has assigned the rotating Gospel Section in the above paper as follows: December, 1967 and 1968 — Mark; December, 1969 and 1970 — Luke; December, 1971 and 1972 — Matthew. The other sections: the History of Israel, the History of the Divided Kingdom, the History of the Early Church and Church History will, as usual remain unchanged. In the case of the R. C. paper, the same Gospel, we understand, will go on for three consecutive years beginning December, 1967, and will rotate only every year.

## NEWS FROM ABROAD

The following is an extract from the U. K. "Newark Advertiser" of November 11, 1967, and is a reference to Dr. Jeyendran Gunasegaram, younger son of the late Mr. S. J. Gunasegaram and of Mrs. Gunasegaram.

"In 1930 the Rector of Elston, Cannon Jack Evans, was bestman at a wedding in Jaffna, North Ceylon. And on Sunday, the son of that groom, Dr. Jeyendran Gunasegaram, read the second lesson at a patronal festival service at Syerston, where Cannon Evans is also Vicar.

Dr. Gunasegaram, who is at an orthopaedic hospital in Surrey and working for his F. R. C. S. — he already has the first part — was staying with Cannon Evans at the week-end. He also addressed Elston family service."

## THE OLIVER BLACKS WRITE

"We have had any number of messages from our many friends in Jaffna. I can't tell you how heart-warming this is for us!...... Our Ceylon boxes are beginning to arrive, so far, in perfect condition. Last week we received all the Laksala purchases from Colombo and the first box we mailed from Vaddukoddai. The sea shells look even more beautiful than we remember."

## V. S. O.

Those initials stand for Volunteer Service Overseas, and is the British equivalent of the U. S. Peace Corps, with some differences. One is that the period of service is shorter — a year to 15 months; another is that the host country pays the living allowance.

Among the half dozen or more V. S. O's. in Ceylon is Miss Judith Douglas, recently arrived at Palaly Teachers' Training College to teach English. Judith's home is in a suburb of Liverpool, where she has lived with her parents (staunch Rotarians) and her grand-mother. She has her degree from Nottingham University, and is engaged to Mr. Hatton who is working for a Ph. D. in Chemistry there. She is occupying the apartment earlier used by P. C. V's. Pat Eush and Lucy Bott.

## WEDDING

Dr. (Miss) Saradha Chornalingam, of the Medical Department, daughter of Mr. (Kalaiarasu), and Mrs. K. Chornalingam of "Lawton House", Manipay South, was married to Mr. Ponnampalam Rajasingham of the Department of Water Supply and Drainage, Ratmalana, on Sunday, the 21st inst., at Sri - Kotha, Kollupitiya. The parents of the bride and bride-groom entertained their friends and relations after the ceremony.

## THE CONGRESS OF RELIGIONS — JAFFNA BRANCH

The Annual General Meeting of the Congress of Religions, Jaffna Branch, was held at the Jaffna Central College Hall on Friday, the 19th inst. The following office-bearers and other appointments were made:

*President* :
Mr. C. Thanabalasingham

*Vice-Presidents* :
Dr. V. T. Pasupathy
Mr. S. Sooraseangaram
Mr. K. Nesiah
Mr. K. A. Selliah
Mr. S. Thambydurai

*General Secretary* :
Mr. S. Kanagaratnam, J. P.

*Liaison Officer* :
Mr. D. R. Gunasegaram

*Joint Secretaries* :
Mr B. T. I. Segarajasingham
Mr. S. Selvarajah

*Treasurer* :
Mr. K. Chelvarajan

*Hony. Auditors* :
Messrs. Ratnam & Co., Accountants

### The General and Inter-Religious Council

This is to consist of the office-bearers and the following members:

Mr. S. R. Kanaganayagham
Mr. M. Kanagasabay
Mudlr. C Mututhamby
Mr. S. Ponniah
Mr. S. Srinivasan
Mrs. Pearl Athinasiar
Dr. W. Luther Jeyasingham
Dr. R. E. W. Jeberatnam
Mr. C. C. Somasegaram
Mr. M. Vairamuttu
Mr. J. M. Sabaratnam
Mr. S. Kathiravelupillai
Mr S H. M. Sahidu
Mr. E. Sabalingam
Mr. L. S. Kulathungam
Mr. A. T. Duraiyappah
Mr. K. Paramothayan
Mr. K. E. Kathirgamalingam
Mr. M. Weerasingham.

### Executive Committee

In addition to the office-bearers, the four following members:

Mr. S. Ponniah
Mr. S. Srinivasan
Mr. M. Kanagasabay
Mudlr. C. Mututhamby.

### Representatives to the General Council of the Parent Congress in Colombo

Messrs. M. Kanagasabay, D. R. Gunasegaram, S. Kanagaratnam and S. Thambydurai.

It may be noted that the function of the General and Inter-Religious Council of the Jaffna Branch includes *inter alia* the settlement of religious disputes arising in Jaffna, if they are brought to the notice of the Council. If no settlement is reached, the matter will be referred to the Inter-Religious Council of the Parent Congress.

## YOUTH WORK CAMP

The Religious Education Board of the Jaffna Diocese of the Church of South India has made arrangements for a Youth Work Camp to be held at the Christa Seva Ashram and the Women's Centre from the 3rd to the 6th of next month. It starts on the evening of the 3rd and goes on till the forenoon of the 6th. A Registration Fee of 50 cts. and a Camp Fee of Rs. 3/- per person will be charged. Further details can be had from the Director of Religious Education, Mrs. S. T. Asirvatham, Parsonage, Tellippalai.

## TO BANGKOK FOR THE E. A. C. C.

The Rev. Dr. D. T. Niles, who is the Secretary of the East Asia Christian Conference, and Mrs. Niles are leaving Colombo tomorrow by air to Bangkok in Thailand for the sessions of the Conference to be held from the 30th inst. to the 8th of February. In addition to the Rev. and Mrs. J. J. Ratnarajah, already mentioned in these columns, Miss Mabel Thambiah, the Principal of the Vembadi Girls' High School, is attending it from Jaffna.

## "LAKSALA" AND THE WOMEN'S CENTRE

By now the initial introductions are over. It is clear that Women's Centre sarees, towels and sarongs would compete with others at "Laksala", but that its serviettes, cushion covers, pillow cases, chair-backs have almost a clear field. The Centre is also introducing table mats, dress-lengths with skirt-borders and trim for the blouses, and travel-sheets of lighter weight than the usual bed-spreads. It is not deserting other textiles — but definitely trying to be more imaginative and better. The Rs 6-75 sarongs are sold almost as they leave the looms.

— Cor

## THANKSGIVING SERVICE

A Service of Thanksgiving in memory of Mercy Chelvaratnam Wijayaratnam, the wife of Mr. I. S. Wadsworth Wijayaratnam, Manager of the Motor Equipment Company, Colombo, was held at the [illegible]h Reformed Church, Wellawatte, on Monday the 22nd inst., at 5 p. m. [illegible] was led by the Rev. K. J. Mills and Mr. Lyman S. Kulathungam, the brother of the deceased, read the Bible Lesson and offered the closing prayer. A special lyric was sung by a group of her relatives. Mrs. V. S. D. Sathianadhan paid a tribute to her life and work, and the Rev. J. J. Ratnarajah preached the sermon.

Mrs. Sathianadhan, in the course of her tribute, referred to the days she and Mercy spent in the Uduvil Girls' College as students, and later for a short period as teachers also in the Sunday School class taught by her mother Mrs. Isaac Paul. Mercy was then a girl full of cheer and life, and she remained that till her death. Her name suited her very well indeed. She was full of the quality of mercy which truly blessed her and those with whom she came into contact. She extended her friendship to many persons and her joy was contagious. Though she had no children, children always found in her residence in Colombo a veritable home for themselves. She began a Sunday School for them there and ran it for many years till her death. No one asked her to start such a school. It was on her own initiative and on her own resources that she launched it at first, then as it grew she had the help of her colleagues in the C. S. I. Church in Colombo and a few others. She also helped very much people belonging to the poorer classes and the needy. Mrs Sathianadhan then referred to her unwavering faith in the Lord. Even when she was confined to her sick bed for a few months, her faith was glowing. Her many friends and relatives have lost a very cherished and loved one, Mrs. Sathianadhan added.

The Rev. Mr. Ratnarajah, in the course of his sermon, referred to Mercy as a great lay-woman of the Church, who was a strong help to its pastors. She took keen interest and was busily involved in all activities of the Church, specially in the Ladies' Guild. Mr. Ratnarajah also described her as a deeply valued friend.

The service came to an end with benediction pronounced by the Rev. K. J. Mills.

## THE BUNKERS REMAIN IN AMERICA

Word has been received that the Rev. Dr S. K. Bunker, former President of Jaffna College, and Mrs. Bunker, who were expected to go to India for a short term till 1970, have had to change their plans, and will now remain in the U. S. A. They have rented a house in Wilton, Connecticut, where their daughter Grace teaches, and where Dr. Bunker was ordained and his father was pastor.

## JAFFNA Y. M. C. A. — 2nd DAY CAMP

The 2nd Day Camp of the Jaffna Y. M. C. A. was successfully concluded on the 18th December.

The theme this time was 'Deep Roots—Firm Foundation', and as an improvement, the overall pattern of the Camp was slightly changed.

Among the thirty-five boys who participated, there were Protestant Christians, Catholics, and Hindus. The programme included Bible Study, Moral Instruction, Music and Singing, Play Acting, Clay-work, Paper-work and Art, Indoor games, Athletics, Gymnastics, English and Tamil Speech Training, Short Story Writing, a Fancy-dress Competition, and a Picnic to Cooke's Bungalow.

The boys were divided into three tribes, the Apaches, Comanches, and Senecas, in typical Red Indian style, with Chieftains, and Tribe Councillors, in charge of each tribe.

The certification was very colourful. Many parents of campers were present to witness the closing function of the Camp. The evening's programme started with an exhibition of hobbies and handicrafts, which was of a high order. This was followed by an entertainment programme by the campers. At the certification, which was presided over by Mr. W. A. Walton, Vice-President of the Jaffna Y. M. C. A., the Chief Guests were Mr. J. M. Sabaratnam, Additional Government Agent, and Mrs. Sabaratnam. It was indeed very colourful to see the boys wearing their special Y. M. C. A. Camp Sports Shirts, and Red Indian Head Gear, as they walked up to receive their certificates.

The Candle Light Service brought the Camp to a fitting close. The Camp was directed by [illegible] Nav[illegible] [illegible]ary of the Jaffna Y. M. C. A.

## The Congress of Religions (Jaffna Branch) Annual Report — 1966 / '67

This is the first Annual Report that is being presented since the formation of this Branch in February, 1966.

Within three months of the formation of this Branch we had the unique privilege of having Jaffna as the venue of the 2nd Annual Convention of the Ceylon Congress of Religions. The Convention was presided over by the Ven. the Mahanayake Thero of the Malwatha Chapter. As members are aware it was a spectacular occasion at which the highest religious dignitaries representating the various faiths in the island graced us with their presence.

As indicated in the Annual Report of the Parent Congress for 1996 / '67, this Mission to the North constituted a substantial contribution to nation-building through religious amity. We can particularly call to mind the exhortation by the Ven. the Mahanayake Thero to his Sinhalese brethren that they should also learn and speak Tamil in the same way that the Tamils of Ceylon should study Sinhalese. Our membership rose to the occasion and contributed liberally towards making the Annual Convention a success as we were the hosts on that occasion. Special mention must be made of our President who had placed his car at the disposal of the Congress visitors from Colombo and entertained some of the important guests.

Although we had intended to do much in the way of celebrating the festivals of the various religions and of organising lectures and seminars, we could do very little in this connection as our membership is somewhat scattered outside the town. We were privileged, however, to have a very illuminating talk on the Baha'i faith by Mrs. Orpha Daugherty from the Phillipines. As our membership includes many enlightened persons who have distinguished themselves in different walks of life, it is hoped that we can in the future utilise available material within the Branch to organise talks on religious and kindred subjects.

During the period under review we had to lose the services of Mr M. M. Abdul Cader, Vice-President, who was a very co-operative and enthusiastic worker, on his transfer to Kalutara. We also lost temporarily the presence of another Vice-President, the Rev. S. Selvaretnam of the Christa Seva Ashram, but we hope to have him with us soon. Mr. A. Gnanasundaram, a member of our General Council, has left Jaffna on transfer and Mr S. Bala Kumaran, an Assistant Secretary, has shifted his practice to Colombo.

We have also to record the loss to the Branch and to the community the untimely death of Dr. K. E. Shanmugaratnam and of Dr. C Gurusamy who was a revered figure in Jaffna.

Our total membership, however, has on the whole been sustained.

D. R. Gunasegaram,
General Secretary,
Jaffna Branch

## ANNOUNCEMENT

The marriage will take place of Dr. J. Gunasegaram, son of the late Mr. S. J. Gunasegaram and of Mrs. Gunasegaram, to Dr. (Miss) Suvendrini Ratnavale, daughter of Dr. W. D. Ratnavale and of Mrs. Ratnavale, on 2nd February, 1968, at Christ Church, Galle Face, Colombo.

*Devotional*

## FACING A CRISIS

By the Rev. Dr. James S. Mather

In the Garden of Gethsemene, the Master and His disciples faced a great crisis. Never before did the disciples have a similar experience. They had gone to the Garden, with their Master, for Prayer, but a great multitude of people, as the Bible says, armed with swords and staves, carrying lanterns and torches, came and arrested Jesus. This story is told in all the four Gospels, and all the reports put together present a clear picture, see Mt. 26 : 36 — 56; Mk. 14 : 32 — 50; Lk. 22 : 39 — 53; Jn. 18 : 1 — 13. The disciples evidently were deeply stirred by the sight of the large crowd that came, as well as by the swords, because all the four Gospels make mention of "multitude", and "swords".

When the crisis came, you observe, Peter took one line of action, and the Master took another, quite different from Peter's.

(1) *Peter took a sword.* He did not take the sword to frighten the enemy, but as John says, "smote the High Priest's servant, and cut off his right ear". You know that what Peter did was quite contrary to what his Master had taught all those years He had been with them. In the Sermon on the Mount, He had said, "Resist not evil, but whosoever shall smite thee on thy right cheek, turn to him the other also". Retaliation was forbidden, but Peter seems to have ignored or forgotten his Master's teaching.

There are many people today, who believe in the "sword-method" of Peter, in facing crises in life, as individuals, or in the sphere of the home, or of the Church. You know, how Peter's wrong line of action ended with his denial of his Master, for whom, at one time, he was prepared to die, or professed to do so.

(2) But look at the Master, how He faced the crisis:

(a) He did not try to run away, or to retaliate. To Peter, He said, "Thinkest thou that I cannot pray to my Father, and He shall presently give me more than twelve legions of angels?" Mt. 26 : 53. Saying it, He declared to the world that His sufferings were voluntary.

(b) In His way of facing a crisis, the first and foremost thing was Prayer to God, dependence on Him. He knew earlier that the crisis was coming, and forewarned His disciples, and said, "Watch and Pray". But none of them took His warning seriously, and, instead, they slept.

Today, in Ceylon and in other parts of the world we as individuals and as a Church are passing through a big crisis. Yes, we are at an important turning point, and there is urgent need for every Christian to "Watch and Pray," and to "Pray and Watch," as we have never done before.

(c) Jesus went on with His work, disregarding anything that happened. When He was born, it was announced that He came to preach God's love for man, and now the arrest did not change His programme or mission. The enemy had tied His hands, and later they nailed His hands to the Cross, but they could not tie or nail to a tree His love for God and man, or His dedication, or His passion for service, or tie His power to save, and to restore the lost. You see, how in the Garden of Gethsemene, with His tied hands, He touched the ears of the wounded man and healed him; later hanging on the Cross, He saved the penitent robber, and prayed for others, while He Himself was in great pain.

No situation however difficult and unpleasant, and no crisis however complicated and perplexing, should be allowed to draw us away from keeping "first things first" in our life and work. Only the Master's way of facing a crisis will turn evil into good, will change our fears into songs of victory, even as He changed His Cross into His throne of love and mercy, and the crucified Lord is the Lord of Victory, and of Peace and Joy.

## TO ALL OUR SUBSCRIBERS

We regretfully announce to all our subscribers that our subscription rates have been increased to Rs. 15-00 per year for subscribers in Ceylon, and to Rs. 20-00 per year for those outside Ceylon. The new rates take effect on the 1st January, 1968.

We are forced to take this step for reasons well known to you. For more than ten years the subscription has remained static, while the cost of paper, printing and even postage has doubled or even trebled. We have borne this very heavy burden for too long and an increase in subscription is *only one way out* to meet the heavy expenditure involved.

**Manager.**

## SACERDOTAL JUBILEE

A SERVICE IN THANKSGIVING

of

the 25th Anniversary

of

the Ordination

of

THE REV. A E K LEWIS

will be held at

St. MARY'S CHURCH, KOPAY,

on

*Monday, 29th January, 1968, at 7·45 a. m.*

## FOR SALE

"Allison" Piano — wooden frame. Very good condition. First offer over one-thousand nine-hundred accepted.

S. V. Vairamuttu,
Tellippalai.

## CEYLON - AMERICA SOCIETY

WELCOMES

7 P. C. V's.

2 Yocums

1 V. S. O.

TRIMMER HALL

*February 6, 1968, 4-30 p. m.*

*DO COME!*

Bring Re. 1/- for tea!

(If you are interested — annual dues are Rs. 8/- singles: Rs. 10/- couples.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிதோறும் வெளிவருவது

# உதயதாரகை

கிறிஸ்தவ வார இதழ்] Estd. 1841 [UTHAYATHARAKAI

மலர் 128 ] 26 — 1 — 1968 இதழ் 4

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்த ஜனத்துக்கும் இழிவாம்."

## வாலிபருக்கு வேலை வாய்ப்பு

அடுத்த இரு வருடங்களில் ஓரிலட்சம் வாலிபரின் வேலையில்லாப் பிரச்சனையைத் தீர்க்க அரசாங்கம் திட்டமிடுகிறது. இது சம்பந்தமாகத் தேசியமய சேவைகள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. இராசேந்திரா தலைமையில் நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையை விரைவில் பிரதம மந்திரிக்குக் கொடுக்க இருக்கிறது.

## வடக்கில் உப்பு உற்பத்தியதிகரிப்பு

வடபகுதியில் வருடத்துக்கு 115000 தொன் உப்பு உற்பத்தி செய்யும் திட்டமொன்றைக் கைத்தொழில் மீன்பிடியமைச்சு தயாரித்துள்ளது. இலங்கையில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கே போதாத நிலையில் இங்கு விலையும் உப்பு காணப்படுவதால் போதியளவு இங்கேயே உற்பத்திசெய்ய வேண்டுமெனக் கைத்தொழிலமைச்சு கருதியுள்ளது.

## விளையாட்டு நிலம்

பண்டத்தரிப்புக் கிராமசபை அப்பகுதியில் ஒரு விளையாட்டு நிலமுண்டாக்க ருபா 10000 ஒதுக்கியுளளது.

## புதிய கிராம சபை

யாழ்ப்பாண மாவட்டத்தில் புதிய கிராமசபையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. காவற்குளி கிராம சபையின் சில பகுதிகளைப் புறம்பாக்கி அமைக்கப் பட்ட இதற்குக் கைதடி கிராமசபை யெனப் பெயரிடப்பட்டிருக்கிறது. ஆறு வட்டாரங்களைக் கொண்ட இந்தக் கைதடி கிராம சபைக்கான முதலாவது தேர்தல் ஜூன் மாதத்துக்கு முன் நடைபெறும்.

காவற்குளி கிராம சபை எட்டு வட்டாரங்களைக் கொண்டதாக இருக்கும்.

## புதிய நெசவுச்சாலை

தேகாலையைச் சேர்ந்த அல்தியா எனுமிடத்திலே 18 கோடி ருபா செலவில் அமைக்கப்படவிருக்கும் புதிய நெசவுசாலைக்குக் கிழக்கு ஜேர்மனியின் பிரதமர் சென்ற வாரம் அத்திவாரக்கல் நாட்டியிருக்கின்றார். கிழக்கு ஜேர்மனிய அரசாங்கத்தின் உதவியோடு அமைக்கப்படும் இந்தப் புதிய தொழிற்சாலை இயங்கத் தொடங்குமிடத்து அதிலேவருடம் ஒன்றுக்கு ஏழரைக்கோடி யார் புடவை நெசவு செய்யப்படும். 1 கோடியே 170 லட்சம் ருத்தல் பருத்திநூல் நூற்கப்படும். அப்பொழுது இலங்கை வருடந்தோறும் வெளிநாட்டுச் செலவாணியில் இரண்டரைக்கோடி ருபாவைச் சேமிக்கக் கூடியதாகும் என நம்பப்படுகிறது.

## தேக்கமரம் நடுகை

யாழ்ப்பாணம், காலி, வவுனியா, மட்டக்களப்பு, இரத்தினபுரி, பதுளை, குருநாகலாகிய மாவட்டங்களில் 1,500 ஏக்கர் காணியிலே தேக்கமரம் நடுவதற்குக் காணி மந்திரி காரியாலயம் திட்ட மிட்டிருக்கிறது. நடுத்தர வகுப்பினர் குடியேற்றத் திட்டத்தின் கீழ் இந்தக் காணி வழங்கப் பட விருக்கிறது.

## புதிய தபால் தலைகள்

சுதந்தர தினத்தை யொட்டி பெப்ரவரி 2 ஆம் திகதி இரு புதிய தபால் தலைகள் வெளியிடப் படவிருக்கின்றன. ஒன்று 5 சத முத்திரை. மற்றது ஒரு ருபா முத்திரை. சேர் பரன் ஜெயதிலகவின் நூற்றாண்டு விழாவை யொட்டி பெப்ரவரி 14 ஆம் திகதி ஒரு புதிய தபால்தலை வெளியிடப் படும். அது 25 சதமுத்திரை யாகும்.

## கல்விப் பொதுத்தராதர (சாதாரணதர)ப் பரீட்சை கிறிஸ்தவம் (ரேவ். க. அல்லாது

இப்பரீட்சையில் நிரந்தரமாயிருக்கும் இஸ்ரவேல் மக்களின் வரலாறு, பிரிக்கப்பட்ட இராச்சியங்கள்; ஆதிச்சபையின் சரித்திரம் (அப். நடபடிகள்); திருச்சபைச் சரித்திரம் என்ற மூன்று டகுதிகளை விட, மாறிவரும் சுவிசேஷப்பகுதி கீழ்வரும் திட்டத்தின்படி அமைக்கப்படுள்ளதென அறியத்தரப்பட்டுள்ளது. டிசம்பர் 1957, 1968—மாற்கு சுவிசேஷம்; டிசம்பர் 1969, 1970 — லூக்கா; டிசம்பர் 1971, 1972 — மத்தேயு என முறையே இருவருடங்களுக்கு ஒருசுவிசேஷபகுதி, ஆகஸ்டுப்பரீட்சை ரத்துச் செய்யப்பட்டதும் பரீட்சாதிகாரி இத்திட்டத்தை அமைத்துள்ளார். ரோமான் கத்தோலிக்க பரீட்சையில் ஒரே சுவிசேஷம் அடுத்த மூன்று வருடங்களாகத் தொடரும்.

## அத்தியட்சர் பேசுகிறார்

இலங்கை அங்கிலிக்கசபை கொழும்பு அத்தியட்சர், உயர் மறைத்திரு ஹரலட் டீ சொய்சா அவர்கள் கடந்த திங்கட்கிழமை கறுவாக்காட்டு பாப்ரிஸ்த் ஆலயத்தில் நடைபெற்ற கிறிஸ்தவ ஒருமைப்பாட்டுக்கான மன்றாட்டு ஆராதனையில் அருளுரை நிகழ்த்தியபோது, "கிறிஸ்துவின் அன்பு, சமாதான சுவிசேஷம் உலகுக்கு மிகவும் வேண்டிக்கிடக்கிறது. பிளவுபட்டசபையின் குரலை உலகம் ஏற்காது; ஆகையால கிறிஸ்தவர்கள் பணிவோடும்நம்பிக்கையோடும் ஒருமைப் பாட்டுக்கு உழைக்கவேண்டும். அது சபை நன்மைக்காகவல்ல அது சேவிக்க வேண்டிய உலக நன்மைக்காகவே" எனக் குறிப்பிட்டார்.

இவ்வாராதனையில் பாப்ரிஸ்த், மெதடிஸ்த, பிரிஸ்பிற்றீரிய, அங்கிளிக்கன் சபையினரும் இரட்சணிய சேனையாரும் கலந்து கொண்டனர்.

"கிறிஸ்தவ சபைகள் ஒருமைப்பாட்டை நாடுவது கடவுள் சித்தமாயிருக்கிறது. என்ன பிரச்சனைகள் தோன்றினும் பணிவுடனும் நம்பிக்கையுடனும் கிறிஸ்தவ ஒருமைப்பாட்டுக்குக் கிறிஸ்தவர்கள் உழைக்கவேண்டும். தடைகளை மேற்கொண்டு ஒன்றுபட வேண்டும்." என அத்தியட்சர் மேலும் கூறினர்.

## புதினக் குறிப்புகள்

சமீபத்திலே நவமாக ஒரு வால் வெள்ளியைக் கண்டுபிடித்த ஜப்பானிய அமெய்சூர் வானசாஸ்திரிகள் இருவர் தற்போது மற்றொரு வால்வெள்ளியையும் நவமாகக் கண்டுபிடித்து அதற்குத் தங்கள் இருவரதும் பெயரையும் சேர்த்து "இகேயா—ஷெகி-2" எனப் பெயரிட்டிருப்பதாக ஜப்பானிய வானசாஸ்திர நிலையம் அறிவித்துள்ளது.

○

ஈளசவட்டத்தில் பாம்பு விஷத்துக்குத் தங்கத்தைக்காட்டிலும் அதிகதேவை ஏற்படுமென்று காசிநகரில் நடக்கும் இந்திய விஞ்ஞானிகள் மகா நாட்டில் பிரபல விஞ்ஞானியான டக்டர் பி. ஜே. டிபோராஸ் கூறியிருக்கிறார். புற்றுநோய் போன்ற கொடிய வியாதிகளைத் தீர்க்கப் பாம்பு விஷத்திலிருந்து மருந்துகள் தயாரிக்கப் படுவதே இதற்குக் காரணமாம்.

○

பிரித்தானியாவிலுள்ள வேல்ஸ் நாட்டில் 1891 ஆம் ஆண்டு 54 சத விகிதமான மக்களால் பேசப் பட்டுவந்த வேல்ஸ்மொழி இன்று 26 சத விகித மக்களாலேயே பேசப்பட்டு வருகிறது. இந்த மொழிக்குப் பிரித்தானிய அரசாங்கச் சட்டத்தில் அங்கீகாரம் அளிக்கப்படாது ஆங்கிலம் ஒன்றுதான் ஆட்சி மொழியாக இருந்துவருவதே அது வளம் குன்றிவரக் காரணமாகும்.

## சந்திர மண்டலத்திற்கு மனிதர்களை அனுப்பும் ஆரம்பம்

சந்திர மண்டலத்துக்கு மனிதர்களை அனுப்புவதற்கு முன்னர் சிலபரீட்சார்த்த விண்வெளிப் பிரயாணங்களை அமெரிக்க விஞ்ஞானிகள் நடாத்தத் திட்டமிட்டுள்ளனர். இப்பயணத்தில் உண்மையான மனிதர்களுக்குப் பதிலாக, மனிதர்களைப் போன்ற உருவ அமைப்புக் கொண்ட 'ரோபட்' எனப்படும் செயற்கைப் பொம்மைகள் பயன்படுத்தப் படவிருக்கிறது.

லூனர் மொடுல் எனப் பெயரிடப்பட்டுள்ள 15. 5 தொன் எடையுள்ள விண்வெளிக் கலசமே இதகையை பரீட்சையின் போது பயன்படுத்தப்படுகிறது. சட்டர்ண் ஒன்று எனப்படும் றொக்கட்டில் வைத்து இக்கலசம் விண்வெளிக்கு அனுப்பி வைக்கப் படுகிறது. சந்திர மண்டலத்தில் போய்இறங்கி, பின்னர் திரும்பி விண்வெளியில் சஞ்சரித்து பூமிக்கு வரக்கூடிய தகுதி இக்கருவியில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களுக்கு இருக்கிறதா என்பதனைச் சோதித்துப் பார்க்கவே இத்தகைய பயிற்சி மேற்கொள்ளப் படுகிறது.

இனிமேல் மனிதர்களைப் பவுத்திரமாக அப்புவித் தரையில் இறக்கி, அவர்களைப் பின்னர்பூமிக்குக் கொண்டு வந்து சேர்ப்பதில் காட்டப்பட வேண்டியஅக்கறைக்கு இப்பரீட்சைகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும்.

பதினெட்டு மாடிகளைக் கொண்ட பிரமாண்டமான கட்டடத்தின் உயரத்தையுடைய சட்டர்ண் றொக்கட் லூனர் மொடுல் கலசத்தை விண்வெளிக்கு எடுத்துச் செல்லும். இதற்கு வேண்டிய எண்ணெய்யும் இக்கருவிக்கு நிரப் பப்பட்டு விட்டது. இக்கருவியில் இம்முறை இணைக்கப்பட்டுள்ள கருவிகள் யாவும் முற்றிலும் புதிய ரகத்தைச் சேர்ந்தவை என்பதனால் திட்டமிட்டபடி உள்ள பயணத்தில தற்செயலாக மாற்றங்கள் ஏற்படலாம்.

இம்முறை நடைபெறும் பரீட்சார்த்த பயணத்துக்கு மேற்கொள்ளப்படும் சகலவிதமான ஆயத்தங்களும் மனிதர்களைச் சந்திர மண்டலத்துக்கு அனுப்பி வைக்கும்போது கையாளப்படும் என்பது குறிப்பிடத் தக்கது.

---

## மாபரன்தானே ஒளிர்கின்றன்

"ஜெயம்"

மக்கள் குலத்தின் ஒருசோக்கம்
மாண்பு மதங்கள் போதிக்கும்
அக்கா லமும் என்னுவதும்
எம்பெ குமான் பரீட்சைகை.

தக்கா தாரம் கனுடன்
தகுதி யாக சாம் சொன்னன்
மக்கள் இயற்கை மாபிறப்பில்
மாபரன் தானே ஒளிர்கின்றன்!

வாழும் நல்ல உயிர்களுமே
வளமாய் வாழ வேண்டுமெனில்
நாளும் நம்மை மிதித்தவரும்
நலிவைப் போக்கி நசுக்குங்கள்

பாழும் எண்ணக் குவியல்களை
பார்த்து ஓடச் செய்புங்கள்.
வாழும் விண்ணும் போன்றதுவே
வலிதெய் வீசும் கொள்ளுங்கள்!

காலம் காலம் முதலாக
காசினி வாழும் பாவையுமே
காலம் இல்லா கடவுளவர்
கைவண மையர் அறிவீரே!

[illegible]

## அவர் திருந்திவிட்டார்

(ஜே. பி. ஜெனத் )

மாலை 6 - 30 மணிதான் இருக்கும். எல்லா வேலைகளையும் முடித்து விட்டுக் களைப்பைப் போக்க ஒரு சவிச்சேரில் உட்கார்ந்தேன்.

ஏனோ இன்று என் மனதில் இன்ப நிகழ்ச்சிகளும், துன்ப நிகழ்ச்சிகளும் ஒன்றன்பின் ஒன்ருய்க் கலந்து உறவாடின. என்னுடைய எண்ணங்கள் எல்லாம் வெளியுலகில் மூழ்கியிருந்தன. திடீரென கதவுகள் தட்டப்படும் சத்தம் என் காதைத் தாக்கியது.

கதவைத் திறந்து வெளியே பார்த்தபோது எங்கள் சபைக் குரு அமைதியாக நின்றிருந்தார். 'வணக்கம் ஐயா... வாருங்கள் உள்ளே' என்றேன். போதகர் எங்கள் வீட்டில் உள்ள அனைவரின் நலனையும் விசாரித்தார். என் மூத்த மகன் சுந்தரத்தை அதிகமாகக் கேட்டார். எங்கள் குடும்பத்திற்காகப் போதகர், செபம் செய்துவிட்டு விடைபெற்றுக் கொண்டார்.

அவர் சென்றபிறகு மீண்டும் சவிச்சேரில் அமர்ந்தேன். 25 ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகள் யாவும் திரைப்படக் காட்சியினைப் போன்று என் மனக்கண்முன் ஓடின.

என் நினைவுகள் யாவும் இப்பொழுது போதகராய் இருக்கும் மகன சுந்தரத்தையே சுற்றிச் சுற்றி வந்தன. என் பள்ளி வாழ்க்கை முதலில் தோன்றி மறைந்தது. பள்ளிப் படிப்பு முடிந்தவுடன் மேல் படிப்புக்குச் செல்ல ஆசை கொண்டேன். ஆனால் என் தந்தை இளமையிலே கல்யாணத்தை முடித்து வைத்து விட்டார்.

என் கணவரின் குடும்பம் நல்ல செல்வ நிலையில் இருந்தது. நானும் முதலில் பணத்தைக் கண்டு ஆனந்தப்பட்டேன். அதே பணத்தைக் கொண்டு என் கணவரின் அன்பை விலைக்குக் கூட வாங்க முடியவில்லை.

என கணவரின் செல்வ நிலை உயர்ந்ததே தவிர அவரின் பண்புகளும் ஒழுக்க நிலைகளும் நாளுக்கு நாள் மறைந்துகொண்டே வந்தன. அவர் பழகும் சூழ்நிலையும் நண்பர்களும் அவர் மனதை முடமாக்கி விட்டனர்.

வெல்லத்தை மொய்க்கும் ஈக்கள் போன்று எந்நேரமும் நண்பர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டிருந்தனர். அந்த ஈக்கள் வெல்லத்தை முழுமையாக உண்டாலும் பரவாயில்லை. ஆனால் அதன் முழுப் பாகத்தையுமே கெடுத்து வைத்ததைப்போன்று என் கணவரின் எண்ணத்தையே சீரழித்தனர்.

காலையில் வெளியே புறப்பட்டால் நடு இரவில்தான் வீடு திரும்புவார். எந்த நேரமும் வீட்டுக் கதவைத் திறக்கக் காத்திருப்பதுபோல என் மனக்கதவையும் திறந்து வைப்பேன். ஆனால் வந்தவரே மனக்கதவை சுக்கு நூருக உடைப்பார்.

அடிக்கிற கைதான் அணைக்கும் என்று காத்திருந்தேன். ஆனால் அடிக்கிற கைதான் மேலும் மேலும் உரம் பெற்றது. ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலய மணி என் இதயத்தைத் தாக்கும். ஆனால் அவரின் ஒரு காதில் நுழைந்து மறு காதின் வழியாகச் சென்றுவிடும்.

ஒரு நாள் இரவு 10 மணியிருக்கும். டாரோ வீட்டுக்கதவைப் பலமாகத் தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்து வெளியே பார்த்தேன. பெரிய ரவுடிகள் கூட்டம் சுற்றி இருந்தனர். என் கணவர்தான் எல்லோருக்கும் வழிகாட்டியாக இருந்து வீட்டிற்கு அழைத்தார்.

அன்றுதான் இந்த வீட்டை ஒட்டாடும் இடமாக்க தொடக்க விழாவை ஆரம்பித்து வைத்தார். வந்தவர்கள் அனைவரும் குடித்து விட்டுக் கும்மாளம் அடித்தார்கள். என் கணவரும் இதில் பங்கு கொண்டார். என்னால் எதையும் நிறுத்த முடியவில்லை. என் மனப் போராட்டங்களை யாரிடம் சொல்வது? ஓர் ஆணின் இதய வேதனை வார்த்தைகளாக வெளி வரும். ஆனால் என்போன்ற பெண்களுக்குக் கண்ணீரால்தான் கவலைகளைக் கழுவ முடியும். அழுவேன், அழுதுகொண்டே இருப்பேன். என் கணவருக்காகக் கடவுளை நோக்கிச் செபம் செய்வேன்.

பலூனில் காற்றை அடைப்பதுபோன்று துன்ப நிகழ்ச்சிகள் அனைத்தையும் மனப் பெட்டியில் அடைத்து வைப்பேன். ஒருநாள் அந்த பலூன் வெடித்துவிட்டிருந்தால் ஐயையோ..... நினைக்கவே முடியவில்லை.

காகம் ஒருவன் தலைமீது பறக்கலாம். ஆனால் தலையின் மீதே கூடு அமைக்கவும் முட்டையிடவும் அனுமதிக்கலாமா? அனுமதித்தால் என்ன ஆகும்? இதே நிலைதான் என் கணவருக்கும் கிடைத்தது

இந்த சூழ்நிலையில்தான் என் மூத்த மகன் சுந்தர் 3 ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான். அவனை நல்ல சூழ்நிலையில் வளர்க்க முயன்றேன். எங்கே அந்தச் சூதாடும் குட்டையில் விழுந்து விடுவானே என்று பயப்பட்டேன்.

சுந்தரை முதல் வகுப்பில் நுழையும்போதே கிறிஸ்தவ ஆரம்பப் பாடசாலையில் சேர்த்து விட்டேன். இளமையில் பைபிள் மீது அதிக ஆர்வத்தைச் செலுத்திப் பரிசுப் பொருள்களும் வீட்டில் நிரப்பி வைத்தான். அவனைச் சிறந்த போதகராக்க வேண்டும் என்று நினைப்பேன். அதே நேரத்தில் மறுபுறம் என் கணவரின் உறுமல் இதயத்தில் ஒலித்துக் கொண்டிருக்கும்.

ஒரு நாள் இரவு சுந்தரின் அப்பாவும், அவரது நண்பர்களும் மதுவைக் குடித்துவிட்டுச் சீட்டாடிக் கொண்டிருந்தனர். சுந்தர் அவரிடம் சென்று ஆசிரியை கற்றுக் கொடுத்த 'பொல்லாதவர்களின் ஆலோசனைப்படி நடவாமலும், பாவிகள் வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் கூட்டத்தில் உட்காராமலும் இருப்பவனே பாக்கியவான்' என்ற வசனத்தை ஒப்புவித்தான்.

இந்த வசனத்தைக் கேட்டதும் அவருடைய இரத்தம் கொதித்தது. கண்கள் சிவந்தன. என்ன செய்வாரோ, ஏது செய்வாரோ என்று பயந்து சுந்தரை அணைக்க ஓடினேன். அங்குள்ள பொல்லாதவர்களின் மதுவில் செல்லக் கால்கள் மறுத்துவிட்டன.

அருகில் இருக்கும் பெரிய கோலை எடுத்து ஓங்கினர். நான் ஓடித் தடுப்பதற்குள்... ஐயோ... அம்மா... அம்மா... என்று அலறி விழுந்தான். அருகில் இருந்தவர்கள் எக்காளமிட்டுச் சிரித்தனர். ஆனால் இந்தப் பெற்ற வயிறு அமைதியாக நிற்குமா? இல்லை, இல்லை; என் இதயம் துடித்தது. இவ்வுலகமே சுழல்வது போன்று காட்சியளித்தது.

சுந்தரின் தலையிலிருந்து இரத்தம் ஆறாக ஓடியது. மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றேன். மண்டையில் ஏற்பட்ட பலத்த அடியால் மூளை அதிர்ச்சியடைந்து மனமும் கலங்கிவிட்டது. ஆனால் உயிருக்கு ஆபத்தில்லை என்று டாக்டர் கூறியதைக் கேட்டுக் கதறி அழுதேன். ஆனால் தந்தையின மனம்?

என் கண்ணீர் மகனுக்காகவும் உருகியது, கணவருக்காகவும் கரைந்தது.

நாட்கள் உருண்டோடின. சுந்தரும் மருத்துவ மனையிலிருந்து வீடு வந்து சேர்ந்தான். சுந்தர் எப்பொழுதும் வெறி பிடித்த நிலையிலேயே இருந்தான். என் கணவரின் நிலையில் மாற்றமே இல்லை. என்னிடம் சுந்தர் சில சமயங்களில்நன்ருகப் பேசுவான் அடுத்த நேரங்களில் எல்லாப் பொருள்களையும் உடைத்துக் கொண்டிருப்பான்; சில நேரங்களில் சிரிப்பான்; திடீரென்று அலறுவான். இச்செயலையெல்லாம் கண்டு அழுகைதான் வரும்.

ஒரு நாள் அவர் குடித்துவிட்டு மயங்கித் தள்ளாடி நடந்து வந்தபொழுது, 'பைபிள்' அவர் காலில் தடுப்பட்டது. அதைச் சுக்கு நூருகக் கிழித்துக்கொண்டிருந்தார். அவர் செயலைக் கண்டு என் மனம் வேதனைப் பட்டது. அவர் அருகில் செல்லவும் பயப்பட்டேன்.

திடீரென்று வெறி பிடித்த வனைப்போல் சுந்தர் ஒரே பாய்ச்சலில் பைபிளைப் பிடுங்கி இரண்டு கையிலும் அணைத்துக்கொண்டு படிகட்டில் வேகமாக இறங்கினன். அவரும் சுந்தரை துரத்திக் கொண்டு இறங்கினர்.

இறங்கிய வேகத்தில் சுந்தர் கால் இடறி 'அம்மா' என்று அலறித் தரையில் வந்து விழுந்தான். என் மனதைக் கசக்கித் தூரத்தில் எறிவது போன்று இருந்தது

முன்பு ஏற்பட்ட இடத்திலேயே பலமாக அடிபட்டு மயக்கமுற்று இருந்தான். மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றபொழுது ஓர் இனிய செய்தி என் காதில் விழுந்தது. மறுமுறை ஏற்பட்ட அதிர்ச்சியால் மூளை நன்கு அமைந்து விட்டது என்றும் உயிருக்கு ஆபத்தில்லை என்றும் டாக்டர் கூறினர்.

என் சுந்தரைக் கட்டிப்பிடிக்க ஓடினேன்.

அங்கே—

என் கணவரின் கால்கள் அவரையும் அறியாமல் மருத்துவ மனையில் உள்ள சுந்தரிடம் நின்றிருந்தன. சுந்தர் மயக்கமுற்று இருந்தாலும் இருந்த 'பைபிள்' மட்டும் நழுவ வில்லை. சங்கீதம் முதல் அதிகாரம் பிரித்தநிலையில் இருந்தது. முதல் அதிகாரத்தின் முதல்வசனம் என் கணவரின் கண் மட்டுமல்ல; அவர் இதயத்தையும் குத்தியது. அன்றைய தினத்திலிருந்து நிகாரியம் என் யாவையும் ஒழித்துவிட்டு இயேசுவை என்னும் ஒளியிடம் சென்றார். இன்று எங்கள் குடும்பமே இன்பத்தில் பிரகாசிக்கிறது என்று நினைத்துக் கொண்டிருக்கும்போதே, என்னையும் அறியாமல் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. இதுதான் ஆனந்தக் கண்ணீரா!

—பன்னீர்

நேயர் கடிதம்.

## தெருவுக்கு மண் இடும் தொழிலாளர்

ஐயா,

யாழ். மாநகர சபையின் 7 ஆவது வட்டாரத்தில், "நாயன் மார்வீதி" என நவமானபெயரோடு கூடிய ஒரு தெருவிருக்குண்டு. இந்த வீதியின் கேவல நிலைக்கண்டு இவ்வீதியால்போக்குவரவு செய்யும் மக்கள் மிகவும் வேதனைப்பட்டு, இப்படியும் ஒரு வீதி மாநகர சபை எல்லைக்குள் இருக்கிறதே என்று பேசிக்கொண்டு செல்வதை என்றும் கேட்கலாம். சமீபத்திலேற்பட்ட கொடிய வெள்ளப்பெருக்கும் இவ்வீதியை, அலோலம், கல்லோலப்படுத்தி விட்டது. போக்குவரத்துக்கு லாயேற்றதாக விளங்கி வந்த இந்த வீதியை, கருணையுள்ள ஆணையாளர்கள் கண் வைத்து ஒரளவு சிறுசிறுதிருத்தங்கள் செய்ய ஏற்பாடு செய்துள்ளார்கள். வீதியிலுள்ள சிறுசிறு கிடங்குகளைச் செம்மைப்படுத்தி, நிரவி மட்டமாக்கிச் செல்லும் பணியை நிறைவேற்ற பணியாளர்களை நிறுத்தியுள்ளனர். ஆனால், ஆங்கு, ஒழுங்கைக்கு மண்போட வந்த தொழிலாளர் மிகவும் சுறுசுறுப்பற்றவர்களாக விருப்பதையும், "மாதம் போம் காதவழி" என்ற மாதிரி இரண்டொரு சிறு கிடங்குகளை நிரவவே நாலைந்து நாட்களைப்போன்ற ஆண்கள் பொழுதைப் போக்குவதையும் கண்டு வரிப்பிறப்பாளர்கள் மிகவும் வேதனைப்படுகின்றார்கள். ஒரு சாதாரண சிறுவன் இரண்டு மணித்தியாலம் செய்யும் சிறு வேலையைக்கூட இந்த மாநகர சபைத்தொழிலாளர்கள் ஐந்து ஆறுபேர் சேர்ந்தும் முடிக்க முடியாத நிலையை இன்றும் இங்கு காணலாம். இது எவ்வளவு அநீதி? மேற்பார்வையாளர் தூங்குகிறார்களா? ஐம்பது சதத்துடன் நிரவக்கூடிய ஒரு சிறு கிடங்கை மாநகரசபை ஊழியர்கள் ஐம்பது ருபா செலவு செய்தாலும் நிறைவேற்ற மாட்டார்கள் போலக் காணப்படுகிறது. இந்த இலட்சணத்தில் மாநகரசபைச் செல்வம் விரயமாகுவ மாநகரசபை எந்த விதமான அபிவிருத்தித் திட்டங்களைத்தானும் செய்ய முடியுமா? பணம் எப்படி வர முடியும்? பணத்தை உறிஞ்சும் ஒரே நோக்குடன் நேரத்தைப் போக்கும் 5 ருபா சம்பளகாரனிடம் ஐம்பது சதத்துக்காவது வேலை வாங்க எமது அதிகாரிகள் முன் வருவார்களா? இல்லையேல் ஆவகாங்குள்ள சனசமூக நிலையம் வாசிகசாலை போன்ற நிறுவனங்கள் இவைகளை மேற்பார்வை செய்ய அனுமதிப்பார்களா?

கா. இரகுநாதன்
நாயன்மார்கட்டு
7 ஆம் வட்டாரம்

---

எனது சுயராஜ்யம் எமதுலாச்சாரத்தன் பெருமையைப் பேணிக் காப்ப தாயிருக்கும், நான் பல புதிய காரியங்களை எழுத விரும்புகிறேன். ஆனால் அவை இந்திய கற்பனையில் எழுதப்பட வேண்டும்.

○

தன்னிடம் அறிவாத ஒரு ஆத்மா உண்டென்றும், சரீர பெலனிலும் அறிவுடன் ஆத்ம பெலமும் இருக்கிறதென்றும் அந்த ஆத்மா உடல் வலியுடன் மரணத்தையும் முடியுமென்றும் இந்திய அறிந்து கொள்ள வேண்டுமென விரும்புகிறேன.

மகாத்மா காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயதாரகை
UTHAYATHARAKAI

1968 ஆம் ஆண்டு ஜனவரி மீ 26 ஆம் நாள்

# நன்று, ஆனால்....

அரசாங்கம் பல நல்ல திட்டங்களைத் தீட்டுகிறது. சிக்கன நடவடிக்கைகளில் இறங்குகிறது. நாட்டுக்குத் தேவையான பொருள்களை உற்பத்திசெய்வதிலும், உணவு உடைகளில், சுயதேவை நிறைவில் கவனஞ் செலுத்துவதிலும், வேலையற்ற வாலிபருக்கு அரசாங்க அலுவலகங்களிலும், கூட்டு நிறுவனங்களிலும், வேறு இடங்களிலும் வேலைகொடுக்க ஆராய்வதிலும் ஈடுபடுகிறது இவற்றோடு இன ஒற்றுமையை வளர்க்கவும் கவனம் செலுத்துகிறது. நன்றுதான்.

ஆனால்......

நாட்டின் அவசிய தேவைகளையும் குறைத்து மக்களைக் கஷ்டத்துக் குள்ளாக்குகிற தென்றுங் காணப்படுகிறது. நாட்டில் நோயாளர் தொகை அதிகரிக்கிறது. வைத்திய சாலைகள் எங்கும் இடநெருக்கடி காணப்படுகிறது. மலேரியா மறுபடி தொல்லை கொடுக்கிறது. இவற்றைக் கட்டுப்படுத்த வைத்தியர்கள் தேவை. ஒரு வைத்தியக் கல்லூரி போதாது; இன்னொன்று வேண்டுமெனக் காணப்பட்டு, போதிய வைத்தியரைப் பயிற்றியாக முயற்சி செய்யப்பட்டது. அம்முயற்சி ஆரம்பித்து நெடுங்காலமாகிவிடவில்லை. பயிற்றப்பட்ட வைத்தியர் தெருவில் விடப்படுகிறார்கள். இன்னும் பயிற்றப்பட்டு வருகிறார்கள். வேலைகொடுக்கப் பணமில்லையெனக் கூறப்படுகிறது. வயிற்றைக் காட்டலாம்; வாயைக் காட்டலாம்; நோய்களை என் செய்வது? அதனையும் அனுபவித்தாகும்படி பொதுமக்களை, சிறப்பாக ஏழைகளை நிர்ப்பந்திப்பது முறையாகாது.

நாடெங்கும் தொழிற் பயிற்சி நிலையங்கள் உருவாகி வருடந்தோறும் 500 பேருக்குப் பயிற்சியளிக்குந் திட்டமும் இப்படியே ஆகுமானால் வியப்பதற்கில்லை. தொழில் என்ன? மோட்டார் வேலை, மின்சார வேலை எனக் கூறப்படுகிறது எத்தனை பேருக்கு வாய்ப்புண்டாகும்? தொழில் கிடைக்குமா? வசதியுண்டா? தேவையுண்டா? பயன் கிட்டுமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது. வைத்தியருக்கே வேலை கொடுக்கப் பணமில்லை. இவர்களுக்கு?

சுக வாழ்வு மனிதருக்கு வேண்டும். அதற்கு மருந்துகளும் வேண்டும். இறக்குமதியைக் கட்டுப்படுத்தி விட்டால் நடக்கக்கூடியதென்ன? ஆயுள்வேத சிகிச்சையில் இறங்கி காணி பூமியை விற்க வேண்டிய நிலையில் இறங்குவதா? சிந்திக்க வேண்டிய விஷயம்.

எங்கே விலைக் கட்டுப்பாடு பிறக்கிறதோ அங்கெல்லாம் 'கறுப்புச் சந்தை' க்கு நல்ல வாய்ப்புண்டாவது கண்கூடு. மருந்துக் கடைக்கும் இவ் வியாதி பரவ வாய்ப்பளிக்கலாகாது விலைக் கட்டுப்பாடு பொருள் தட்டுப்பாட்டுககே வழிகோலும் (பொருள்கள் இல்லாமலில்லை. அதிக விலைக்கு எவ்வளவும் வாங்க வழியுண்டாகும்)

இன ஒற்றுமை அரசாங்கக் கவனத்தி லிருந்தாலும் சில திணைக்கள விஷமிகளின் செயல்கள் இன வேற்றுமைக்கு வித்திடுகின்றன. சிங்களம் அறியாத ஊழியருக்கு (சிங்களம் தேவையற்ற ஊழியருக்கு) தமிழில்தாராளமாக வேலை நடைபெற வாய்ப்புள்ள இடங்களுக்குத் தனிச்சிங்களப் படிவங்கள் அனுப்பப்பட்டு வேலைவாங்க முயற்சிப்பது இவ்வித விஷமச் செயல்களுக்கு ஓர் எடுத்துக் காட்டு. தொட்டிலையும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளி விடுவதுபோன்ற இச்செயல்கள் இனஒற்றுமைக்கு உதவமாட்டா. அடிக்குமாப்போல அடிக்கிறேன், அழுமாப்போல அழு என்பது போலாகும்.

அரசாங்கத்தின் நல்ல திட்டங்களை வரவேற்கிறோம். ஆனால் இவ்வித அவசிய தேவைகளில் அரசாங்கம் செய்து வரும் ஆபத்தான, தேவையற்ற கிரியைகள் மக்களுக்குப் பெரும் கஷ்டத்தை உண்டாக்கும். எனவே பணநிலைக்குத் தக்கதாக, தேவைக்குத் தக்கதாக அவசிய கருமங்களைக் கவனிக்க அரசாங்கம் கவனம் செலுத்துவது நாட்டுகு நன்மை தரும்.

# மாவட்ட சபைகள்

கூட்டரசாங்க அரியணைப் பேருரையிலும், தேசிய அரசாங்க அரியணைப் பேருரையிலும் இடம்பெற்று அங்கீகரிக்கப்பட்டு வந்த மாவட்ட சபைகள் பற்றிய மசோதா விரைவில் நாடாளுமன்றத்துக்கு வரவிருக்கிறது. அதன் நுணுக்கங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

அதில் என்ன இருக்கிறதென்றே பாராது அதைக் கொள்கையளவில் எதிர்க்கவும், எதிர்ப் பிரசாரங்கள் செய்யவும் கூட்டணியினர் தீர்மானித்துள்ளனர். சிங்கள இனத்துக்கே பேராபத்தாகுமென்பது அவர்கள் வாதம். அன்று அதை அவர்கள் உணராது அரியணை உரையில் சேர்த்திருந்தார்கள். இன்று உணரத் தொடங்கி விட்டனர். தேசப்பற்று, இனப்பற்று அவர்களுக்கு அதிகம்! அதிகார ஆசையென்று ஆர் சொல்வார்?

தேசிய அரசாங்க அங்கமாகிய தமிழ்க் காங்கிரசும் அதை எதிர்க்கிறது. அரியணை உரையின்போது ஒரு குறிப்பாவது சொன்னதாயில்லை. இன்று தமிழினத்துக்கே ஆபத்தென்ற முடிவு அதற்குண்டாகியுள்ளது மாற்றுக் கட்சியின் முயற்சி நன்றெனினும் எதிர்த்துப் பழகியதாலோ, அன்றி எதனாலோ எதிர்க்கிறது. சிங்களக் கட்சிகள் சிங்களவருக்கு ஆகாதது என்னும்போது அது தமிழருக்கும் ஆகாததென்று கூறுவதனால் அதைக் கொண்டுவருவோர் (ஏனையோர்) முட்டாள்கள் எனத் தோன்றும், ஓரினத்துக்கும் உதவாத ஒன்றை இவ்வளவு பிரமாதப்படுத்திப் பயந்து நடுங்கி நுணுக்கமாய் ஆராய வேண்டிய அவசியம் என்ன? தட்டியிருக்கலாமே.

அப்படியில்லாதிருப்பதால் அதில் ஏதோ விஷயம் உண்டென்பது வெளிப்படை. அது வெளிவரும் வரைபொறுத்திருந்து பார்க்கலாம். அதுவரை அபிப்பிராயங் கூறுவதற்கில்லை.

அரசியல் மேதை பண்டாரநாயக்க காலத்திலிருந்தே பிரமாதமாகப் பேசப்பட்டு வந்த மாவட்ட சபை முறை ஆபத்தானதென்று கொள்வதற்கில்லை. இப்போது வரும் சரத்துகள் முன் கருதப்பட்டவைகளிலும் குறைவானவையென்று சொல்லப்படும்போது சிங்களக் கட்சிகள் எதிர்ப்பதும், அன்று எதிர்வார்த்தை பேசாது அங்கீகரித்து இன்று அதை தமிழ்க் காங்கிரஸ் எதிர்ப்பதும் நாட்டு நன்மையோ, இன நலனே கருதியவையாகுமென நம்புவதற்கில்லை.

அமைதியாகத் தீர்க்காலோசனையுடன் ஆராய்வதும் நல்லதைச் செய்வதும் அரசியற்றலைவர்களுக்கு வேண்டியதாகும். தம் பெருமையோ செல்வாக்கோ குன்றினாலும் மக்களுக்கு நலமானது நடக்க உதவ வேண்டும். போட்டி மனப்பான்மையுடனல்ல பொதுநல நோக்குடன் கருமங்கள் நடைபெற வேண்டும்.

போட்டி மனப்பான்மை தந்த பயன்தான் நாம் அனுபவித்துள்ளோமே-களனி மகாநாடு தொடங்கி, காலி முகக் கடற்கரை நிகழ்ச்சிகள், கலவரங்கள் வரை கண்ட அனுபவங்கள் [illegible] கொண்டு கருமங்களை நடத்தாய் நடத்திவருது மேல்.

# உனக்குப் பயத்தைத் தருவதென்ன? பயமற்ற சீவியத்தின் இரகசியம் யாது?

[வண. டாக்டர் ஜேம்ஸ் மேதர்]

கடவுள், 'பயப்படாதே' 'பயப்படாதே' என்று பலருக்குச் சொன்ன சம்பவங்கள் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆதியாகமம் 15 : 1 இல் கடவுள் ஆபிரகாமுக்கு 'நீ பயப்படாதே, நான் உனக்குக் கேடகமும், உனக்குப் பெரியபலனுமாயிருக்கிறேன்'' என்று சொன்னார். அதே புத்தகம் 26 : 24 இல் ஈசாக்குக்கு ''பயப்படாதே, நான் உன்னுடனே கூட இருக்கிறேன்'' என்றார். அப்படியே மோசேக்குக் கடவுள் சொன்னார், எண்ணாகமம் 21 : 34: கிதியோனுக்கு, நியாயாதிபதிகள் 6 : 23; ஏசாயா தீர்க்கதரிசிக்கு. ஏசாயா 41 : 10; 43 : 1; 43 : 5; 54 : 4. புதிய ஏற்பாட்டில் நம்முடைய இரட்சகர் சீஷரைப் பார்த்து, 'பயப்படாதே' என்று பல தருணங்களில் சொன்னார். உதாரணமாக பரி. மத்தேயு 10 : 28; 10 : 31; பரி. லூக்கா 12 : 32; இயேசு உயிரோடே எழுப்பப்பட்ட நாள் அதிகாலையில் தேவதூதரின் செய்தி, 'பயப்படாதே' பரி. மத். 28 : 5. என்பதாகும்.

பயமற்ற சீவியம், ஒரு கிறிஸ்தவனின் பரம சுதந்தரம், நல்லது உரிமை. அது, அவன் கிறிஸ்துவையண்டிச் சீவிப்பதால் பெற்றிருக்கும் சலாக்கியம், சிலர் எப்பொழுதும் பயந்த சீவியம் உள்ளவர்கள். மனோ தத்துவ சாஸ்திரிகள், பயம் காந்தத்தைப் போல் மனுஷன் பயப்படும் காரியத்தை அவனிடம் கவர்ந்து இழுக்கும் தன்மையுள்ளது என்கின்றனர். இப்போ நாம் வசிக்கும் காலத்துக்குப் பல பட்டப்பெயர்கள் கொடுக்கப்படுகின்றன. 'அற்றமிக் ஏஜ்' முதலானவை. எல்லாப் பெயர்களுக்குள்ளும் அதிகப் பொருத்தமான பெயர், 'பயத்தின் காலம்' (Age of Fear). மனுஷன் இன்று பயப்படும் காரியங்கள் அனேகம். இருபதாம் நூற்றூண்டு, 'பயத்தின் நூற்றாண்டு.' மனுஷருக்கும் வரும் வியாதிகளில், கூடிய வியாதிகளுக்குப் பயமே காரணம் என்று பலர் கூறியிருக்கின்றனர். மனுஷன் பயப்படும் பல காரியங்கள், திரும்பச் சம்பவிக்காதவைகள். ஆகையால் அவைகள் வருமென்று பயந்த பயமும், அதோடே சம்பந்தப்பட்ட அங்கலாய்ப்பு முதலியவைகளும் வீணே. அதைவிட, பயங்களால் மனுஷன் செய்ய வேண்டிய கடமைகளைச்செய்யாமலும், வரும் நல்ல தருணங்களைச் சரியாய்ப் பிரயோகிக்காமலும், அங்கலாய்ப்பில் தன் நேரத்தையும் பெலனையும் வீணாய்ச் செலவிடவும் நேரிடுகிறது.

மனுஷனுடைய நல் வாழ்க்கைக்கு, 'பயமற்ற சீவியம்' அவசியம். அதை நம்முடைய இரட்சகர், அவருடைய பின்னைகளுக்கு அருளுகிறார். இயேசு, நம்முடைய சுமைதாங்குபவர் பேதுரு அப்போஸ்தலன் அதை அவருடைய முதலாம் நிருபத்தில் 5:7 இல் கூறினார்: ''உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் (இயேசுவின் மேல், வைத்துவிடுங்கள்.'' பயத்துக்குக் கீழ் அஸ்திபாரமாய் அல்லது அடியில் இருப்பது மனுஷனுக்குள் கடவுள் வைத்த ஒரு நல்ல விருப்பம். மனுஷன் இயல்பாய், கஷ்டமில்லாமல் சந்தோஷமாயிருக்கவும், போராட்டங்கள் இல்லாமல் சமாதானமாய்ச் சீவிக்கவும் விருப்பமுள்ளவன். ஆனால் இந்த நல்ல விருப்பத்தைக் கைகூடச் செய்யக் கூடியவர், அந்த விருப்பத்தை மனுஷனுக்குள் வைத்த கடவுளே. ஆகவே மனுஷன் கடவுளைவிட்டு எவ்வளவு தூரம் சீவிக்கிறானோ, பயமும் அவ்வளவு அதிகமாய்க் கூடுகின்றது. எவ்வளவு கடவுளுக்குக் கிட்ட இருக்கிறானோ, அதற்குத் தக்கதாய் பயமும் குறைந்து அற்றுப் போகின்றது.

## பயத்தைப் பறக்கடிக்கும் பயம்

நமக்கிருக்கும் தெய்வ பயமே நம்முடைய அவிசுவாசத்தின் சகல பயங்களையும் பறக்கடிக்கின்றது. சில நஞ்சுகளுக்கு மாற்று மருந்து வேறொரு நஞ்சாயிருப்பதுபோல், நம்முடைய விசுவாசக் குறைவால் உண்டாகும் பயங்களுக்கும் மாற்று மருந்து நமக்கிருக்கும் தெய்வ பயமே. நம்முடைய வேதம், பயமற்ற சீவியத்தை உண்டாக்கும் தெய்வ பயத்தைப் பற்றி நன்றாய்ப் போதிக்கின்றது. தெய்வ பயம் என்றால் என்ன? கடவுள் நரகத்தில் போடுகிறவர் என்ற பயம் அல்ல. கடவுளுடைய அளவற்ற அன்பையும், பொறுமையையும், பரிசுத்தத்தையும் குறித்து மனுஷனுடைய மனதிலும், இருதயத்திலும் பெரிய மதிப்பும், நன்றியும் வணக்கமும். இருக்கும்பொழுது உண்மையான தெய்வ பயம் உண்டாகின்றது. இதுவே கிறிஸ்தவனின் 'பயமற்ற சீவியம்' உற்பத்தியாகும் நீரூற்று, எபிரேயர் நிருபத்தை எழுதியவர் 11 : 28 இல், ''பயத்தோடும் பக்தியோடும்'' கடவுளுக்கு ஊழியம் செய்வதைப்பற்றி எழுதினார். இப்பயம் அன்பின் பயம், நன்றியால் உண்டாகும் பயம், பூரண ஒப்படைத்தல் உண்டாக்கும் பயம். இப்பயமே, ''பயமற்ற சீவியம்'' உண்டாகும் உற்பத்தி. இது நம்மையும், பரி. பவுல் பாடியதுபோல் என்றும் பாடச் செய்கிறது, (ரோமர் 8 : 31) ''கர்த்தர் நம் பக்கத்திலிருந்தால் நமக்கு விரோதமாய் இருப்பவன் யார்!.''

# தலைவர்களுக்குச் சோதனையான காலம்

(அரசியல் நிருபர்)

அரசாங்கத்திற்கு தமிழரசார் கொடுத்த காலக்கெடு முடிய இன்னும் ஒரு வாரமே இருக்கிறது. கல்வி மந்திரி இரிய கொல்லை தமது பிரபலமான உயர்தர தொழில்நுட்பக் கல்வி மசோதாவைக் கைவிடப் போவதாகத் தெரிகிறது. கல்முனைத் தேர்தல் பலவிதமாகத் திரும்பி நெளிகிறது. வேலை நிறுத்த அபாயம் முற்றாக அகன்று போகவில்லை. அந்நியச் செலவாணி நெருக்கடியினால் சேலை இறக்குமதியும், மருந்து இறக்குமதியும் பெருமளவிற் குறைக்கப் பட்டுள்ளன. இந்த நேரத்தில் இலங்கையின் அரசியல் அரங்கு பல விநோத மாற்றங்களை அடையலாம். என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

உயர்தர தொழில் நுட்பக் கல்வித் திட்டம் பலவிதமான சர்ச்சைகளுக்குள்ளாகி இறுதியில் மசோதா வடிவம் பெற்றது தெரிந்ததே. அதனுள் சேர்க்கப்பட்டிருந்த மொழிச்சரத்து தமிழரசாருக்குப் பெரு வெற்றியாகக் கருதப்பட்டது. அதாவது சிங்களவருக்கும், தமிழருக்கும் அவரவர் தாய் மொழியிலேயே கல்வி புகட்டப்படும் என வரையறுத்தனர் தமிழரசார்; மந்திரியோ பெற்றோரின் விருப்பப்படி மொழி தீர்மானிக்கப்படும் என்றார். பலப்பரீட்சையில் தமிழரசார் வென்றபோதும் அவர்களது கொள்கைக்கு அரசாங்கத்தில் போதிய ஆதரவு கிடைக்கவில்லை. தாய்மொழிக்குப் பதில் ''வீட்டு மொழி'' [illegible] தப்படல் வேண்டும் என்ற குரல் ஒலித்தது, தமிழருக்குச் சிங்களம் இரண்டாவது கட்டாய பாடமாக இருத்தல் அவசியம் என வாதாடப்பட்டது. எனினும் தமிழரசார் விட்டுக் கொடுக்கவில்லை. இப்பொழுது மசோதா கைவிடப்படும் எனத் தெரிகிறது. நெய் திரண்டு வருகையில் தாழியுடைந்த கதையாகி விட்டதா?

மாவட்ட சபை நகல் மசோதா தயாரிக்கப் பட்டாயிற்று. தேசிய அரசாங்கம் பதவியில் இருக்க வேண்டுமாயின் இம்மாதம் 31ம் திகதிக்கு முன்னர் இது பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கப்பட வேண்டியதவசியம். ஆனால் அரசாங்கக் குழு அங்கத்தவர்கள் சிலர் இதனை எதிர்ப்பதாகக் கூறப்படுகிறது. அவர்கள் இவ் விஷயத்தில் சுதந்திரமாய் வாக்களிக்கும் உரிமை கோருவர் எனத் தெரிகிறது. எனினும் மாவட்ட சபை மசோதாவுக்கு முன்பிருந்த எதிர்ப்பு இப்பொழுது இல்லையென அரசியல் அறிஞர் கருதுகின்றனர். பாராளுமன்றத்திற் சமர்ப்பிக்கப்பட்ட மசோதா நிராகரிக்கப்படுமாயின் அரசாங்கம் இராஜினாமாச் செய்யவேண்டியது நியதி. எனவே 31 ஆம் திகதிக்கு முன் இம்மசோதா அரசாங்கக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப் பட்டுப் பின்னர் பெப்ரவரி 8 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கலாம். அது கடைபெறுவிடில் பல சுவையான அரசியல் மாற்றங்களைக் கண்டு களிக்கலாம்.

அடுத்த மாதம் 18 ஆம் திகதி நடைபெற விருக்கும் கல்முனைத் தேர்தல் வெகு முக்கியம் வாய்ந்ததாக உருவெடுக்கிறது. தமிழரசுக் கட்சியும், இஸ்லாமிய சோஷலிஸ்ட் முன்னணியும் சூறாவளிப் பிரசாரத்தில் இறங்கிவிட்டன. கடைசி நேரத்தில் ஏற்படும் குத்துக் கரணங்களும் கல்முனையில் மலிந்து காணப்படுகின்றன. நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் உள்ளூர் ஐ. தே. க. செயலாளர் இஸ்லாமிய முன்னணியைச் சேர்ந்தார். இஸ்லாமிய முன்னணிச் செயலாளர் ஐ. தே. க. வைச் சேர்ந்தார். எனவே கல்முனை அரசியல் அவதானிகளுக்கு நல்விருந்து.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை அதிகரித்த வண்ணமே இருக்கின்றது. இம்மாதம் மருந்து இறக்குமதியிலும கட்டுப்பாட்டை கொணர்ந்துவிட்டது அரசாங்கம். இதனால் உதவாக்கரை மருந்துகள் கடைகளில் வந்து குவியப் போகின்றன என வைத்தியர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். எனவே ஏழை மக்கள் பெரும் அவதிக்குள்ளாவர் என்பதில் ஐயமில்லை, சேலை இறக்குமதியில் இருபத்தைந்து வீதம் குறைக்கப்படவிருக்கிறது. இது சில வழிகளில் நாட்டுக்கு நன்மையையே உண்டாக்கும். ஏற்கனவே வளர்ந்து வரும் நமது புடவை உற்பத்தி இதனால் மேலும் உயர்வு பெற்றோங்கும் என்பதில் ஐயமில்லை.

எனினும் இந்நடவடிக்கைகள் யாவும்அரசாங்கத்தின் மதிப்பைக் குறைப்பதாகவே இருக்கும். அரசியலோரா பொதுசன அபிப்பிராயத்தைப் பற்றி அக்கறைகாட்டுவதாகத் தெரியவில்லை. இது பலருக்கு விந்தையாகவுள்ளது.

# ஜனவரி 31 காலக்கெடுவும், தமிழரசாரை எதிர்நோக்கும் நெருக்கடியும்

பின்னுமல் முழங்காமல் தமிழரசாரும் அறிந்து கொள்ளாதபடி இரவோடு இரவாக ஒருநாள் அர்த்த இராத்திரியில் திருமலைத் துறைமுகம் தேசியமாக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சி தொடர்ந்தும் தேசிய அரசில் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டுமா, அல்லது தமிழ்ப் பேசும் மக்களின் சுயமரியாதையைக் காவாத்து பண்ணுமுகமாக தேசிய அரசை விட்டு வெளியேறி அதற்கு நெருக்கடியை உண்டுபண்ண வேண்டுமா என்பதைத் தீர்க்க ஆலோசித்து மேற்படி காலக்கெடு வைத்து கட்சியின் மத்திய குழு கட்சிக்கு ஆணை பிறப்பித்தது. அதாவது தமிழரசார் தேசிய அரசில் சேர்ந்த சமயம் வாக்களிப்பட்ட மாவட்ட சபை மசோதா தை 31க்கு முன் சட்டமாக்கப்பட்டு, தமிழ்ப்பேசும் மக்களை எதிர்நோக்கும் இதர பல முக்கிய பிரச்சினைகளும் தீர்க்கப் படாவிட்டால் தேசிய அரசை விட்டு கட்சி வெளியேற வேண்டும் என சர்வ அதிகாரங்களையும் கொண்ட கட்சியின் மத்திய சபை ஆணை பிறப்பித்திருந்தது. அதே ஆணையில் சொல்லப்பட்ட காரியங்கள் தை 31க்கு முன் நடந்தேறாவிட்டால் அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய கட்சியின் மத்திய குழுக் கூட்டம் தை 31 ஆம் திகதி வரையில் கூட்டப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

தை மாதத்தின் இறுதி வாரமாகிய இவ்வாரத்தில் தானும் மாவட்ட சபை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. 31ம் திகதிக்கு முன் அது சபையில் சமர்ப்பிக்கப்படும் என்று எண்ணுவதற்குத்தானும் பாராளுமன்றக் குழு முன்னர் கூட அது விவாதிக்கப்படவில்லை. இந்நிலையில் கட்சித் தலைவர்கள் செய்ய வேண்டியது மத்திய குழுவைக் கூட்டவேண்டியதே அன்றி, எதேச்சதிகாரமாக தம் எண்ணப்படி காரியங்களைச் செய்வதல்ல, தம் மனம் போனபோக்கில் மத்திய குழுத் தீர்மானங்களுக்கு விளக்கங் கொடுக்கும் தலைவர்கள் தற்போது உள்ள சூழ்நிலையில் காலக்கெடுவை நீடிக்கவேண்டுமா என்பதைத் தானும் மத்திய குழுவைக் கூட்டி அதன் தீர்மானப்படி செய்ய வேண்டுமேயல்லாது. மத்திய குழு தீர்மானத்தில் குறித்த காலக்கெடு முடியும் கட்டத்தில், அதே ஆணையில் குறித்தபடி, அடுத்து எடுக்கவேண்டிய நடவடிக்கை பற்றி ஆலோசிக்கும் கட்சியின் ஓர் அங்கமான வாலிப முன்னணியைக் கலைத்துவிடுவது பற்றி அபிப்பிராயம் வெளியிடுவது முறையாகாது.

கட்சி என்றுமே ஒரு ஜனநாயக அமைப்பாகவே இருந்து வந்துள்ளது. கருத்து வேறுபாடுகள் பேசித் தீர்க்கப்படவேண்டியதே அல்லாது அது காரணமாக இயக்கம் தன்னைத்தானே அங்கவீனம் செய்துகொள்ள முற்படக்கூடாது. யாரும் அவ்விதம் செய்ய முற்பட்டால் அது அனுமதிக்கப்படவும் கூடாது.

விடுதலை இயக்கமான தமிழரசுக் கட்சி யாருக்கும் தனி உடைமை அல்ல. இதை அதன் கர்த்தவான தமிழரசுத் தந்தை அவர்களே தமது கருத்துக்களாலும் செயல்களாலும் வெளிக்காட்டி வந்திருக்கிறார். அவர் என்றும் அதன் ஜீவிய காலத் தலைவராக இருக்க விரும்பாது ஜனநாயக முறைப்படி காலத்துக்குக் காலம் பல பேரும் அதன் தலைவராக வர வழி விட்டுத்தந்திருக்கிறார். குறிப்பிட்ட விடயங்கள் பற்றி அவரை அணுகி அபிப்பிராயம் கேட்ட பத்திரிகை நிருபர்களிடம் அவர் பல சந்தர்ப்பங்களிலும் ''கட்சி இன்னமும் அது பற்றி விவாதித்து ஒரு முடிவுக்கு வரவில்லை. கட்சியின் மத்திய குழுவின் தீர்மானமே கட்சியின் தீர்மானங்களைத் தீர்மானிக்க முடியும். அதுவே கட்சியைக் கட்டுப்படுத்த முடியும். தனிப்பட்ட செல்வநாயகம் கூறுவது அவரது சொந்தக் கருத்தாக இருக்க முடியுமே தவிர மத்திய குழுவின் கருத்தாகவோ, சொந்தக் கட்சியின் கருத்தாகவோ இருக்கமாட்டா தென்று'' கூறியிருக்கிறார்.

எனவே, கட்சியின் அமைப்புத் திட்டப்படி ஜனநாயகரீதியில் நடந்து கொள்ள வேண்டியது தமிழரசு பாராளுமன்ற உறுப்பினரது கடமை. கட்சியின் தலைமையை கைப்பற்றிக் கொள்ள பாராளுமன்ற உறுப்பினர் முற்படக் கூடாது. தவணை நீடிப்பு வேண்டியிருந்தாலும் அதைப் பெறுவதற்கு முறையான வழிமுறைகளை நாடி யாவரும் ஒற்றுமையாக இயங்கவேண்டும். அதை விடுத்து தாம் போன போக்கில் மற்றவர்களும் தம்மைப் பின்பற்ற வேண்டுமென்ற சர்வாதிகார மனப்போக்கு கட்சியின் வளர்ச்சிக்கு தடையாக அமையும் என்பது மட்டுமல்ல அதை அழிக்கவும் செய்யும். குறிப்பாக வளி கொச்சி, சாவகச்சேரி, சுன்னாகம் போன்ற பட்டினசபைத் தேர்தல்களில் படித்த பாடம் கல்முனையிலாவது வெற்றி வாகை சூட அவர்களுக்கு வழிகாலும என்று நம்புகிறேன். ஆகவே, காலக்கெடுவைப் புனராலோசனை செய்து தவணை நீடிப்புத் தருவதாக இருப்பினும் மத்திய குழுவே அதைச் செய்ய வேண்டும்.

இப்பாக.

கண்ணியமான வட்டியுடன் திருப்பிக் கொடுக்க வல்லவனுக்கும் போது மேனுட்டிடம் மகிழ்ச்சியுடன் கடன்படுவேன்.

○

சுயராஜ்யம் நம்மைச் சிந்தித்தாத விடத்து, நம் கலாச் சாரத்தைத் தூயதாக்கி நிலை பெறச் செய்யாத விடத்து அதனால் பயனில்லை. நம் பொதுவான பிரத்தியேக விஷயங்களிலெல்லாம் குணசீலம் பேரிடம்பெறவதே நமது நாகரீகத்தின் கருப்பொருளாகும்.

—மகாத்மா காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Morning Star

26TH JANUARY, 1968.

## CABINET RESHUFFLE

A Cabinet reshuffle has been in the air for sometime now since the U. N. P. won the by-election at Nattandiya. The news has been hailed as most welcome by a large number of the people. We ourselves regard a change in the Cabinet as urgent in the present situation in the country. The promises that the National Government gave the people on its assumption of power and the hopes they had that it would clear the mess created by its predecessors, particularly by the Government of Mrs. Bandaranaike and her Coalitionists, have not been fulfilled. As has been repeatedly pointed out in these columns and elsewhere, the situation in the country has worsened, with the cost of living mounting higher and higher steadily and surely. The solution to this is not a change of Government at the present moment, but a change of those invested with ministerial responsibilities. The criticism which has often been made against several of them is justified and the earlier a change is effected the better would it be not merely for the fortunes of the U. N. P. and its allies but, more important, for the welfare of the entire country.

However, a change should not mean a mere redistribution of Government Departments among the Ministers nor even one of portfolios. A radical change of dropping those who are dead wood should be resorted to by the Prime Minister. In this connection we are disturbed by the rumours prevalent in political circles about considerations which should be taken into account when ministerial changes are effected. The Prime Minister must be strong enough to resist such pleas urged by interested parties as compensation for the loss sustained by persons like Mr. Hugh Fernando, who gave up the lucrative position of an ambassador abroad to contest the Nattandiya seat, and reward for long and meritorious service rendered to the U. N. P. Such considerations should not be allowed to have any effect on the Prime Minister's choice. Without any reference to seniority or personal sacrifice, the best persons available should be selected for ministerial responsibilities. The country has had a surfeit of ministers who have been only demagogues or have regarded their tasks as merely sinecures. They have done preciously little beyond globe-trotting at the expense of the ratepayers, or galivanting about the country posing as the people's saviours and as ready to play to the tune of the prejudices of the unthinking masses, or only basking in the reflected glory of their ministerial offices. It is time that Mr. Dudley Senanayake shows some courage and drops those who are a burden to him from his Cabinet. He has given them two and a half years and more to produce results, and they have so woefully failed. He has had this long period to accommodate the personal ambitions of his colleagues and the wishes of different sections of his own party and his allies. Now he must act.

One Minister who strikes us and many others in the land as a 'must' to be dropped from the Cabinet is Mr. Iriyagolle, the one holding the portfolio of Education and Cultural Affairs. Even the Premier ought to be convinced that the Education Minister's record up to now has been altogether negligible. Almost every thing he has touched, he has messed up. He has been rightly described a bull in a china shop. Believing in his omniscience of all matters educational, only because of his journeyings to several places in the globe, he has refused to listen to the advice of educational experts. As every one knows, the universities would not be in the mess in which they are found today had it not been for him and his ill-digested schemes. And now he has been forced by public censure to withdraw the new Education Bill, which he boasted was going to solve all ills of our people. If the question of providing some help to the private non-fee-levying schools to function effectively has been ignored by the Government till now, in spite of loud protestations even by some of his colleagues that they were their supporters, it was, we are afraid, because of Mr. Iriyagolle's refusal to see reason and appreciate the injustice which continues to be perpetrated on these schools. We have a feeling that the Premier would have taken long ago a decision to help them materially if he had not been afraid of the political consequences that would follow his going against his Education Minister. At least now, when it is all too plain that Mr. Iriyagolle is really dead wood in his Cabinet, the Prime Minister should be able to replace him with one who understands the educational needs of the country, is not merely a demagogue, and is a man devoted to meting out justice to all, irrespective of racial or religious affiliations.

## ALTOGETHER UNWISE

The decision of the Youth Leaguers of the Federal Party calling upon the F. P. Members of Parliament to quit the National Government if the District Councils Bill is not placed before Parliament before the end of this month is, in our opinion, altogether unwise. It may be granted that the rank and file of the Party, specially the youth, have reason for their feelings of disgruntlement that their representatives in Parliament have not succeeded in persuading the Prime Minister and his colleagues to translate their promises about this Bill into action. They have also reason to feel frustrated at the failure of the Government to deal justly with all the legitimate grievances of the Tamil-speaking people. Particularly on the matter of discriminatory policies followed by the Education Minister there is justified resentment. However, at this juncture in the history of the Tamil-speaking people specifically and of the country in general, we should like to urge the rank and file of the F. P. to exercise greater caution and patience than their present demand shows.

They need to understand the present political situation in the country fully before they press with their demand. In the first place, the Prime Minister has really almost insurmountable difficulties to get the approval of his Cabinet and his Government Parliamentary Party for the District Councils Bill. The impression has been created somehow or other in the country, and this will be strengthened by the insistence of the rank and file of the F. P. on their present demand, that the Bill is a thin end of the wedge to bring in a Federal form of Government. Protests from various parts of the Island, particularly from several local bodies, against the Bill have been reported. In addition, the Tamil Congress, and more particularly its leader Mr. G G. Ponnambalam, have declared in no ambiguous terms that they are opposed to this Bill altogether. We have also the declaration made recently by the Opposition that it would fight against the Bill with all its strength because the people in the country do not want it. To them the facts that the late Mr. S. W. R. D. Bandaranaike, to whose policies they are committed, himself was the first to put it up, and that the Government of Mrs. Bandaranaike of 1963 itself in the throne speech promised that "early consideration will be given to the question of establishing District Councils to replace kachcheries," are of no concern. And already there are reports that even Government Members of Parliament intend requesting the Prime Minister to allow them a free vote on this Bill, when it comes before Parliament. Under these circumstances just what chances are there that it will be passed?

In the words of the Editorial of the *Times of Ceylon* in its yesterday's issue: 'The U. N. P. has done its own share of somersaulting, but at least since the National Government was formed there has been a little doubt that the leadership wishes, and intends, to deal honourably in the matter. But here again the rank and file are likely to be querulous, so the Government has to proceed with caution. Perhaps there have been an excess of caution bordering on faint-heartedness, but what is to be gained by the Tamils quitting the Government on this score and bringing Mr. Dudley Senanayake's administration down?" If this happens, it would be a loss not only to the minorities like the Tamils but to the entire country itself. We should urge on the leaders of the F. P. not to forget this and plunge into a precipitate and [illegible]

## HERE AND THERE

### A Cabinet Minister's Principle

The British Museum is a unique institution of its kind. It has a copy of every book published in the British Commonwealth. It also has priceless art treasures, like the Eligin Marbles. It may be remembered that Karl Marx worked in it for many years producing his books. Recently it was in need of space and money to expand and applied to Mr. Gordon Walker, the appropriate Cabinet Minister. He not merely refused, but threatened to distribute the excess of things owned by the British Museum among other libraries and museums. That a Socialist Minister should be concerned with equitable distribution is understandable. But he must also understand that some things need concentration and suffer by dissemination. Why should there be libraries? Why cannot the books be distributed among everybody (especially among those who cannot read)? Why should aeroplanes stop only at certain places, why cannot they stop every quarter of an hour? And why should power be concentrated in the hands of Cabinet Ministers; why cannot everybody have the power to do what he likes?

### Mao's Thought and What it Means

It was announced sometime ago that students in China have abolised examinations and either asked for or received power to dismiss teachers whose teaching does not accord hundred percent with Mao's thoughts. The abolition of examinations means that they do not recognise the difference between intelligence and dulness but only the difference between Mao's thought and non-Mao's thought. The right to dismiss teachers means that a school that allows the teaching of non-Mao's thought is not fulfilling its purpose. We would, however, ask whether a school itself fulfills any purpose. Mao's thought is there. It is a serious reflection on it to say that anybody should go to a school and be taught about it by a set up of petty fogging teachers. The students themselves know it already. Nobody needs to be told that the sun rises in the morning; everybody knows it. 'Why schools'? we ask. We may also ask 'why students'? If Mao's thought is there clear, unchallengable and unshakable, it does not suffer by anybody not knowing it. If there are to be no students, why should there be parents? In the absence of other thoughts and thinkers, Mao's thought can reign supreme.

### An Easy Suggestion

Many of our readers would some weeks ago have read an appeal by a Buddhist Thero for Unity; and the basis he put forward for Unity was the acceptance of Buddhism by every one. Such a solution to the problem of unity, is, we would suggest, a little naive. An English sailor in Paris is once said to have exclaimed 'Why can't these people call a shoe a shoe; why do they call it a sabot?" It would have made things a lot easier for the English sailor if all Frenchmen spoke English and not French; but Frenchmen speak French as Englishmen speak English.

### The Madras Conference

It cannot be gainsaid that the Tamil Conference in Madras was exploited politically by the State authorities in their fight against the language policy of the Central Government. But that was not all that there was to it in the reception that the delegates got. It genuinely thrilled the hearts of the people to see that so many experts and scholars from so many different lands held their language in such honour, their language which according to political reckoning was but one of the many regional languages of the country. That accounts for the tumultous welcome the delegates received in every city in the Madras State to which they went.

### The Big Difference

An important difference between the Conference as it was held in Madras and the way a similar Conference would have been held in Ceylon was the way in which the whole thing was kept clear from its connection with religion. A similar Conference about Sinhalese in Ceylon would have meant a magnification of Buddhism; and a Conference about Tamil in Jaffna would have meant a Saivite ceremony from start to finish. If it be suggested that the Madras Conference had such a character because a Roman Catholic priest was actually in charge, it might be said that the very fact that a Roman Catholic priest from Ceylon was allowed to run a Conference about a language spoken by so many millions of Hindus in India is itself significant. It was not because Fr. Thaninayagam ran the Conference that it kept clear of religion, but because in these matters the people of India are more fair-[minded than] we.

*An Observer.*

## MUSINGS

*(Contributed)*

### Statues

I find Mr. Sivasubramaniam saying in your issue of 12th January that Arumuga Navalar and Dr. Ananda Coomarasamy should have had their statues set up on the Triplicane Beach when the Tamil Conference took place in Madras this month. For a statue to be set up anywhere, it should first have been made and then donated for the purpose. Each of the statues put up in Madras was donated by someone. I believe the Madras Government donated most of them. That of Father Constantine Beschi was donated by the Roman Catholic Archbishop of Madras and those of Dr. Pope and Caldwell by the Church of South India. The statue of Arumuga Navalar was not donated by anyone. It is too much to expect the Madras Government to be excited by Arumuga Navalar. If they so wanted to honour him, they would have had to think of many others with very strong claims. Navalar was a great man as far as Jaffna is concerned; and Jaffna could easily have donated his statue instead of writing about it in the local papers. But I cannot think of any reason for the recognition of Dr. Ananda Coomarasamy in connection with Tamil Literature. He wrote many books but hardly on Tamil Literature. He knew ten or twelve languages; but I wonder if he knew much of Tamil. The Conference was not honouring distinguished Tamils, but only those who had distinguished themselves in Tamil.

### Leaders

Mr. M. Chelvathamby in one of your issues suggests that the present leaders of the Tamils should be deposed and instead Messrs. S Nadesan, C. Suntharalingam and R R. Crossette-Thambiah should be appointed leaders. I hardly think he consulted them before making the suggestion. Nobody will dispute the eminence of these three gentlemen. A girl appearing before an interviewing board was asked where she came from and replied "Anaicoddai." "And what is Anaicoddai noted for?" she was asked. Without the least hesitation she replied, "Gingely oil and Senator Nadesan". Mr. Suntharalingam passed out from Oxford with high honours and had a great career as a University Professor particularly as Warden of Union Hostel; and Mr. Crossette Thambiah had a distinguished legal career. Mr. Thambiah is of a retiring disposition and would be amused at his name being proposed for this kind of thing. The other two are certainly not of a retiring disposition. But that by itself is no qualification. To be a leader one must have the willingness to lead and secondly a leader must to some extent be a follower. That is, he must himself hold the views of his followers. Neither Mr. Nadesan nor Mr. Suntharalingam is anxious to have a following. In fact if they turn behind and find anybody following them, they would be surprised and somewhat embarrassed They are such strong individualists that they would not relish the idea of sharing the views of others. I am afraid Mr. Chelvathamby must hunt elsewhere in his search for leaders.

### The Telegraph and Telephone Strike

For a strike to be effective the service of the strikers must be really missed. Few can say that, when the employees of the Telephone and Telegraph Departments went on strike, they were very much the worse for it. Their machines had so constantly been out of order and the service rendered so perfunctory, that when the employees refrained totally from work the effect of their action was hardly felt. And now that they have resumed work, things are not very much better. It has taken almost a month for all telephones to get into their usual working order. And this is not saying very much.

## E. A. C. C. FOURTH GENERAL ASSEMBLY — BANGKOK, THAILAND.

"In Christ All Things Hold Together" is the theme of the Fourth Assembly of the East Asia' Christian Conference at which some 300 participants from sixteen Asian countries and consultants from all continents will consider the progress of the programme of co-operation among the churches of Asia during the last four years. The General Assembly will be held at Swanganivas, near Bangkok, Thailand from January 30 to February 8, 1968.

The church leaders — clergy and laymen and women — will focus on topics coming under two major sections: Inter-Church Aid for Mission and Service, and a Divided Church in a Broken World.

The working group on Needs and Services will deal with poverty and hunger in Asia today. There is a great temptation for churches in the midst of great need to forget the world's pain and become wholly preoccupied with their inner life. The churches must think, pray, and work together in order to fix priorities responsibly, to determine the most urgent and effective strategy to help alleviate these needs.

A second group will seek to determine the place of the institution in the life of the churches with the changing social situations in Asia and the increasing role taken by governments in social services. The continuing validity of traditional missionary strategy involving institutions needs to be re-examined. They must be willing at times to give up projects in which they are now engaged while seeking new opportunities of service.

East Asian Christians are responding to the conviction that the evangelization of this area of the world is their primary responsibility. While being a part of the Church Universal their sons and daughters need to be challenged to go out as missionaries. The Asian churches also see an inescapable obligation to take responsibility for pre-service and in-service training for missionaries coming to them from the outside. The third working group dealing with 'Sending and Receiving of Missionaries' will deal with these challenges. A more stable structure for implementing this work is in the picture.

Other topics for consideration will be the special problems confronted by Chinese and Indian peoples scattered in other Asian countries and the Church growth in Indonesia. A fourth working group will consider 'Structures of Co-operation and Administration' needed at the regional level in Asia.

The second section on "A Divided Church in a Broken World" will have Mr. T. B. Simatupang, Indonesia, as the Chairman.

*— E. A. C. C. News*

## ...... "BE STRONG AND OF GOOD COURAGE"

*(Josh. 1:9)*

These were the words of God to Joshua, as he led the people of Israel into the promised land after the death of Moses. Israel was a dispossessed people, whose fathers had been slaves only forty years previously. There were many tribes they had to face and many battles they had still to fight; and Joshua, the new leader, was naturally hesitant about the future. It is in these circumstances that these words came to him.

There are, of course, always difficulties to be faced in this world. But men have a habit of creating imaginary difficulties and adding them to the ones they have. The etymological meaning of the word "superstition" is that of something standing over and above something else. It has come to mean something standing over and above faith. Superstition is perhaps common to everybody; but we, the people of the East, take to superstition as a duck takes to water. That is, we revert to primitive animism more easily than people of the West. We invest inanimate things with a life, a spirit and a will they do not have.

Very often what passes as religion in our case is sheer superstition arising out of fear, often fear of imaginary difficulties. God said to Israel "The land is yours, go forth and possess it". If the land is God's, no little gods or devils could stand in the way. We Christians of Jaffna must learn to put on the breastplate of faith and go forth.

*S. K.*

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA.

*Testamentary Jurisdiction. No. 2022.*

In the matter of the Last Will and Testament of Daniel Kathiravelu Periapanayagam of Atchuvely North, Atchuvely.

Deceased.

Josephine Nesaratnam Periapanayagam, widow of Daniel Kathiravelu Periapanayagam of Atchuvely North, Atchuvely.

Petitioner.

This matter coming on for disposal before N. M. J. Rajendram, Esquire, District Judge, Jaffna, on the 12th day of February 1967 in the presence of Mr. G. V. Balasingham, Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated 12th day of February 1967 and the affidavit to the Notary and attesting witnesses dated 12th day of February 1967 and the Last Will and Testament dated 3rd November 1961 and attested by G. V. Balasingham under No. 4021 deposited in this Court having been read.

It is ordered that the above named Last Will No. 4021 dated 3rd November 1961 produced and now deposited in Court be and the same is hereby declared proved and the Petitioner as the Executrix named in the said Last Will be and she is hereby declared entitled to have Probate issued to her accordingly on her payment of Estate Duty and taking Oath of Office.

The 12th day of February, 1967.

Sgd. G. C. Niles,
District Judge, Jaffna.

Drawn by
G. V. Balasingham.
Proctor for Petitioner.

3—4

## IN MEMORIAM

IN LOVING MEMORY
of
**SAMUEL GREEN CULANAYAGAM MILLS**

*Born: 18th August, 1890.*
*Died: 1st February, 1957.*

Blessed are those
Who rest with the Lord.

Affectionately remembered by his wife, children, grand-children and great-grand-children.

"Green Villa",
Manipay.

Printed and published for the American Ceylon Mission by Mr. Abraham Saravanamuthu Thambiratnam, residing at Manipay, at the American Ceylon Mission Press, Uduvil Road, Manipay, on Friday, 26th January, 1968

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org